# கால்நடைகளில் ஏற்படும் உடல் தாழ்வெப்பநிலை

கால்நடைகளில் சாதாரன உடல் வெப்பநிலை குறிப்பிடத்தக்க (101 – 102.5°F) அளவு (96°F) குறையும் பொழுது அவை தாழ்வெப்பநிலையில் உள்ளதாக கருதாலம்.

பொதுவாக, புதிதாக பிறந்த குட்டிகளும் இளங்கன்றுகளும் அதிகமாக உடல் தாழ்வெப்பநிலையால் பாதிக்கப்பட்டு சில நேரங்களில் இறக்கவும் நேரிடுகிறது.

**காரணங்கள்**

- தேங்கி இருக்கும் தண்ணீரில் அதிக நேரம் இருப்பது
- குளிர்ந்த சீதோஷண நிலை மற்றும் ஈரமான தரை
- பாதகமான சீதோஷண நிலையினால் போதுமான தண்ணீர் மற்றும் தீவனம் கிடைக்காதது
- ஈரமான மண் உடன் கூடிய இருப்பிடம்
- சரிவர நீர் வடியாத கொட்டகை

**உடல் தாழ்வெப்பநிலையின் போது தோன்றும் அறிகுறிகள்**

- கால்நடைகள் சோர்வாகவும் தீவனம் எடுக்காமலும் நிற்க முடியாமல் படுத்து இருக்கும்
- மூட்டு பகுதிகள் குளிர்ந்து காணப்படும்.
- உடல் நடுங்கும்
- அதிக இதய துடிப்பும் மூச்சிரைப்பும் காணப்படும்
- இரத்த அழுத்தம் குறைவாக இருக்கும்

**உடல் தாழ்வெப்பநிலையால் பாதிக்கப்பட்ட கால்நடைகளை பராமரிக்கும் முறைகள்**

- கால்நடைகள் தண்ணீர் தேங்கி இருக்கும் பகுதிகளில் இருந்தால், உடனடியாக அவற்றை மேடான பகுதிக்கு மாற்ற வேண்டும்

- காய்ந்த துணி, சாக்கு அல்லது வைகோலை தரையில் பரப்பி அதன் மேல் படுக்க வைக்க வேண்டும்
- கொட்டகையில் தண்ணீர் தேங்கி இல்லாமலும் குளிர்ந்த காற்று வீசாதவாறும் பார்துக்கொள்ள வேண்டும்
- குடிப்பதற்கு சற்று சூடான தண்ணீரும் உரிய தீவனமும் கொடுக்க வேண்டும்
- உடனடியாக கால்நடை மருத்துவரை அணுகி சற்று சூடேற்றப்பட்ட குளுக்கோஸ் திரவத்தை இரத்த குழாய் வழியாக உடலுக்குள் செலுத்த ஏற்பாடு செய்ய வேண்டும்